இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
# PAATHUKAVALAN

1876 – 2026
150 ஆண்டுகள்

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 03 | திகதி : 08.03.2026 | விலை : 50.00

# வடகிழக்கு ஆயர்கள் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் நான்கு மறைமாவட்டக் குருக்களுக்கான தவக்காலத் தியானம்

**- மடுத்திருப்பதியில் 200 மேற்பட்ட குருக்கள் பங்கேற்பு**

வடகிழக்கு ஆயர்கள் பேரவையினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் தவக்காலத் தியானமானது கடந்த 09.03.2026 திங்கட்கிழமை மடுத்திருப்பதியில் வடகிழக்கு ஆயர்கள் பேரவையின் தலைவர் பேரருட்திரு நோயல் இம்மானுவல் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இத்தியானத்தில் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டங்களைச் சேர்ந்த 200 மேற்பட்ட குருக்கள் பங்கேற்றிருந்தனர். காலையில் மடுத்திருத்தல முன்றலில் விவிலிய சிலுவைப்பாதை பக்தி முயற்சியுடன் ஆரம்பமான இத் தியானத்தில் மன்னார் டிவைன் தியான இல்லத் தலைவர் அருட்பணி அகஸ்ரின் மொன்டேகாட் அடிகள் தவக்கால தியான உரையை வழங்கினார். நிறைவாக பேரருட்திரு நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்கள் தலைமையில் மடு அன்னைத் திருத்தலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வுகளை நான்கு மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருமுதல்வர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். நான்கு மறைமாவட்ட தமிழ்க் குருக்கள் ஒன்றாக இணைந்து தியானித்து, செபித்து, கலந்துரையாடி பெற்ற அனுபவமானது குருக்களுக்கு சிறப்பான ஓர் அனுபவத்தையும், புத்துணர்வையும் ஏற்படுத்தியிருந்தது.

# சமாதானத்துக்கான ஆராய்ச்சி மையத்தை உருவாக்கி சமாதானத்தை நிலைநாட்டுவதும் ஆன்மீக வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதுமே எம் நோக்கு

**- வடகிழக்கு ஆயர்கள் பேரவைத் தலைவர் ஆயர் நோயல் இம்மானுவல்**



“வடகிழக்கில் சமாதானத்துக்கான ஓர் ஆராய்ச்சி மையத்தை உருவாக்கி நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்துவதும், வடகிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதுமே எமது பிரதான நோக்கம் ஆகும்” என வடகிழக்கு ஆயர்கள் பேரவைத் தலைவரும், திருகோணமலை மறைமாவட்ட ஆயருமாகிய பேரருட்திரு நோயல் இம்மானுவேல் ஆண்டகை தெரிவித்துள்ளார். பாதுகாவலன் பத்திரிகைக்கு அவர் வழங்கிய சிறப்புப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது : வடகிழக்கில் கொலை செய்யப்பட்ட இறைபணியாளர்களையும், இறைமக்களையும் வேத சாட்சிகளின் நிலைக்கு உயர்த்தவேண்டிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அருட்பணி. அமரர் மேரி பஸ்ரியன் அடிகள் முதல் பலரை எமது நான்கு மறை மாவட்டங்களிலும் இழந்துள்ளோம். இவர்கள் அனைவரும் இறையன்பின் சாட்சிகளாக வாழ்ந்த நிலையிலேயே கொல்லப்பட்டனர் என்றார். யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களின் ஆயர்கள், குருமுதல்வர்கள் அடங்கலாக 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வடகிழக்கு ஆயர் பேரவையானது கடந்த காலங்களில் பல செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்தி வருகின்றது. குறிப்பாக தெரிவுசெய்யப்பட்ட நான்கு மறைமாவட்டங்களைச் சேர்ந்த மறையாசிரியர்களுக்கான ஒரு மாத கால வதிவிடப் பயிற்சி, குருக்கள் துறவியருக்கான வருடாந்தத் தவக்காலத் தியானம், வத்திக்கான திருவழிபாட்டு ஆணையத்தின் பிரதிநிதியுடனான வழிபாட்டுக் கருத்தமர்வு என்பன கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட சிறப்பு நிகழ்வுகளாகும்.

நான்கு மறைமாவட்டங்களிலும் பணிபுரியும் ஆயர்கள் குருக்கள் ஒன்றிணைந்து தியானத்தை மேற்கொள்வதும் தங்களின் பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் ஒரு சிறப்பான அனுபவமாகக் கடந்த ஆண்டுகளில் அமைந்திருந்தது.

## சல்வற்றோறியன் சபை தலைவி ஆயருடன் சந்திப்பு



சல்வற்றோறியன் சபை **தலைமை அருட்சகோதரி மரிய ஜனத்** மற்றும் தலைமை ஆலோசகர் அருட் சகோதரி சுனீலா பொலிமெற்லா ஆகியோர் யாழ். மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப் பிரகாசம்** அவர்களைச் சந்தித்து கலந்துரை யாடியுள்ளனர். இச்சந்திப்பு கடந்த 07ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## திருத்தந்தையை இலங்கைக்கு வருகைதருமாறு உத்தியோகபூர்வ அழைப்பு



இலங்கை நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்கள் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களிற்கு உத்தி யோகபூர்வ அழைப்பு விடுத்துள்ளார். இத்தாலி நாட்டிற்கு உத்தி யோகபூர்வ விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவர்கள் கடந்த 02ஆம் திகதி வத்திகானின் நாடுகளுடனான உறவுகளுக்கான பிரதிச் செயலாளர் மொன்சிஞ்ஞோர் மிஹைட்டா பிளாஜ் அவர்களுடனான சந்திப்பில் இதற்கான அழைப்பினை கடித மூலமாகக் கையளித்தார். திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள் மொனாக்கோ, அல்ஜீரியா, அங்கோலா, எக்குவடோரியல் கினி, கமறூன், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொள்ளவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா மலர் வெளியீடு



பேரறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன் விழா நினைவு மலர் வெளியீடு கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அமலமரித்தியாகிகளின் மாகாண இல்லமாகிய தொடர்பகத்தில் இடம்பெற்றது. இறை வணக்கத்தை செல்வி சஹானா அரவிந்தன் நிகழ்த்தினார். ஆசிரிய ஆலோசகர் திரு. யோண்சன் ராஜ்குமார் நிகழ்விற்குத் தலைமை தாங்கினார். ஆசியுரையினை அமலமரித்தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் அருட்பணி. போல் ஜெயந்தன் பச்சேக், (அமதி) அவர்களும், வாழ்த்துரைகளை சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழாக் குழு இணைத் தலைவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவருமாகிய சிரேஸ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி அவர்களும் யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அவர்களும் வழங்கினர். மலர் வெளியீட்டுரையை மிகச் சுருக்கமாக திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து மலர் வெளியீடு இடம்பெற்றது. மலரின் தொகுப்பாசிரியரும் விழாக்குழுவின் இணைச் செயலாளருமான அருட்பணி செ. அன்புராசா, (அமதி) அடிகள் நெறிப்படுத்தினார். நன்றியு ரையை சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழாக் குழு இணைத்தலைவர் அருட்பணி. ம. ஜெரோ செல்வநாயகம் வழங்கினார். நிகழ்வு மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றது.

## போராட்டங்களின் மத்தியிலும் தடையின்றி வெளிவந்தது பாதுகாவலன் பத்திரிகை

**- திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

இலங்கையின் முதல் கத்தோலிக்க வார இதழாகிய பாதுகாவலன் பத்திரிகை யுத்த காலத்தில் பல போராட்டங்கள் மத்தியிலும் தடையின்றி வெளிவந்தமை பாராட்டுதற்குரியது என திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நோயல் இம்மனுவேல் ஆண்டகை அவர்கள் மடுத்திருப்பதியில் பாதுகாவலன் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாதுகாவலன் பத்திரிகையானது இவ்வாண்டு முப்பொன் விழாவைக் கொண்டாடுகின்ற நிலையில் இலங்கையின் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கு சிறப்பாக வடகிழக்குக் கத்தோலிக்க தமிழ் சமூகத்திற்கு இறை விசுவாசத்தைப் பரப்புவதிலே சிறப்பான பணியை ஆற்றியுள்ளது. குறிப்பாகக் கத்தோலிக்க உள்நாட்டு, வத்திக் கான் செய்திகளையும் ஆன்மீக, சமூக, அரசியல் கட்டுரை களை அவ்வப்போது காலத்தின் தேவை உணர்ந்து வெளி யிட்டு வந்தமை பாராட்டுக்குரியது.

150 ஆவது அகவை காணும் பாதுகாவலன் பத்திரிகை நிறுவனத்திற்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறிநிற்பதாகத் தம் செவ்வியில் குறிப்பிட்டார்.

## மொன்போர்ட் இல்லத் திறப்பு விழா



மொன்போர்ட் அருட்சகோதரர்களாலஅளம்பில் சுவாமி தோட்டவளாகத்தில் அமைக்கப்பட்டு வந்த மொன்போர்ட் அருட்சகோதரர்களின் மொண்பேர்ட் இல்லக் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலை யில் அக்கட்டடத் திறப்புவிழா மாசி மாதம் 21ஆம் திகதி நடைபெற்றது. இலங்கை மொன்போர்ட் துறவற சபைத் முதல்வரும் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி மொன்போர்ட் சர்வதேச பாடசாலை அதிபருமான அருட்சகோதரன் மரியபிரகாசம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து இல்லத்தை ஆசீர் வதிக்க உரோம் நாட்டிலுள்ள மொன்பேர்ட் அருட்சகோதரர்களின் உதவித் தலைவர் அருட்சகோதரர் தனராஜ் அவர்கள் இல்லத்தை திறந்து வைத்தார். சபையின் இந்தியா திருச்சி மாகாண முதல்வர் அருட்சகோதரர் ஜோன் பிறிட்டோ அவர்கள் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகளெனப் பலரும் கலந்துகொண்டனர்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

முப்பொன் விழா

# எமது எண்ணம்

## இயற்கை (NI) செயற்கை (AI) நுண்ணறிவு?

இவ்வாரம் திருத்தந்தை லியோ அவர்கள் குருக்கள் மறையுரையைத் தயார் செய்ய செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தாதீர் என வினயமாக வேண்டியுள்ளார். இப் பின்னணியில் இவ்வார ஆசிரியர் தலையங்கத்தில் சிந்திக்க முனைகின்றேன்.

இன்று நாம் நின்றுகொண்டிருக்கும் “செயற்கை நுண்ணறிவு“ (AI -Artificial Intelligence) என்னும் தளம், முந்தைய கண்டுபிடிப்புகளைக் காட்டிலும் அற நெறி சார்ந்தும், வாழ்வியல் சார்ந்தும் பல வினாக்களை எழுப்பியுள்ளது. குறிப்பாக, மானுடத்தின் அறநெறி வாழ்வுக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் இன்றைய தேவை இயற்கை நுண்ணறிவா? செயற்கை நுண்ணறிவா? என்ற கோணத்தில் தர்க்கமும் கருத்துப் பரிமாற்றமும் கற்றறிந்தோர் அவைகளில் நிகழ்ந்து கொண்டும் இருக்கின்றன. ஒருபுறம், பொருளாதார மேம்பாட்டிற்கான ‘மந்திரக்கோலாக“ இது பார்க்கப்படும் வேளையில், மறுபுறம் மனிதனின் “இயற்கை நுண்ணறிவு“ (Natural Intelligence) மழுங்கடிக்கப்படுகிறதா? என்ற அச்சமும் இயல்பாகவே நம்மில் எழுகிறது.

பொருளாதார மேம்பாட்டைப் பொறுத்தவரை, செயற்கை நுண்ணறிவு என்பது தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது. அதில் எள்ளளவும் மாற்றுக்கருத்து இல்லை. “மேற்கத்திய நாடுகளில் AI குறித்த அச்சமும், வேலைவாய்ப்பு இழப்புப் பற்றிய கவலையும் நிலவுகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தொழில்நுட்பம் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அந்தத் தொழில் நுட்பம் எத்தகைய அடித்தளத்தில் கட்டமைக்கப்படுகிறது என்பதே பெரும் கேள்வி.

பொருளாதாரத் தரவுகளைத் தாண்டி, ஒரு தனி மனிதனின், சமூகத்தின், நாட்டின் “அறநெறி வாழ்வு“ என்பது அந்தந்தத் தளங்களில் அதன் நேர்மையிலும், நிர்வாகத் திறனிலும் அடங்கியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, தொழிலாளர் சந்தையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம். ஆனால், சில வேலைகள் மறையும் பல வேலைகள் மறுவடிவமைப்புச் செய்யப்படும் என்பதே நம் கண்முன் நிற்கும் கள எதார்த்தம்.

இயற்கை நுண்ணறிவு என்பது தகவல்களைச் சேகரிப்பது மட்டுமல்ல் அது சரியான நேரத்தில், சரியான முறையில் அறநெறிக் கோட்பாடுகளுடன் அந்தத் தகவலைப் பயன்படுத்துவதாகும். ஓர் இயந்திரம் தரவுகளை ஆராயலாம்

ஆனால், அதனால் “அன்பு“ செலுத்த முடியாது “இரக்கம்“ காட்ட முடியாது. “நேர்மை“ பேண முடியாது் “ஞானத்துடன்“ முடிவெடுக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவு என்பது கற்றல், அனுபவம் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதன் மூலம் கிடைப்பது. ஒரு மருத்துவர் நோயைக் குணப்படுத்தும் முறையை அறிந்திருப்பது அறிவு ஒரு பொறியியலாளர் விண்ணை முட்டும் கட்டடத்தை எழுப்பும் நுட்பத்தைப் புரிந்திருப்பது அறிவ் ஒரு கணினி வல்லுநர் செயற்கை நுண்ணறிவை உருவாக்குவது அறிவு. இவை அனைத்தும் உலகியல் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவையே! அறிவு என்பது இருபுறமும் கூர்மையுள்ள கத்தி போன்றது. அதைக்கொண்டு அறுவைச் சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றவும் முடியும் அதே கத்தியைக் கொண்டு உயிரைப் பறிக்கவும் முடியும். ஆனால், ஞானம் என்பது வெறும் மூளை சார்ந்தது அல்ல. மாறாக, அது இதயம் மற்றும் அறம் சார்ந்தது. ஒரு செயலால் தனக்கு இலாபம் கிடைக்குமா? என்று பார்ப்பது அறிவு. அந்தச் செயலால் பிறருக்குப் பாதிப்பு ஏற்படுமா? என்று சிந்திப்பது ஞானம். அறிவு “எப்படி?“ (How) என்பதை விளக்கும் ஞானம் “ஏன்?“ (Why) என்பதை உணர்த்தும்.

எனவே, மானுடத்தின் எதிர்காலம் என்பது செயற்கை நுண்ணறிவைத் தூற்றுவதிலோ அல்லது இயற்கை நுண்ணறிவை முற்றிலுமாக மறப்பதிலோ இல்லை. மாறாக, இவை இரண்டையும் “அறநெறி“ என்னும் நூலால் இணைப்பதிலேயே உள்ளது. பொருளாதார மேம்பாட்டிற்குச் செயற்கை நுண்ணறிவை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் ஆனால், அந்தப் பொருளாதாரத்தை வழிநடத்தும் ‘அறநெறி’ என்பது மனிதனின் இயற்கை நுண்ணறிவிலிருந்தே வரவேண்டும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குருவும் கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியருமாகிய அருட்பணி பெ. சதீஸ் குமார் அடிகளாரின் அன்புத் தாயார் **அமரர் பெனடிற் மேரி ஜோசப்பின்** அவர்கள் கடந்த 23.02.2026 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற் பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

# சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை ஆலய மதில் கட்டுமாண பணிக்கான அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

### முதல் மூன்று பரிசுகளையும் பெற்றுக் கொண்டவர்கள்:

1ம் பரிசாக குளிர்சாதனப் பெட்டியைப் பெற்றவர்:
சு. மதுசியா
முகவரி: 32, இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம்: 0717641728
இல: 8447

2ம் பரிசாக சலவை இயந்திரத்தைப் பெற்றவர்:
ப. ஜஸ்ரின்
முகவரி: 13, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம்: 0779612280
இல: 8204

3ம் பரிசாக கைத்தொலைபேசியைப் பெற்றவர்
தே. இராஜப்பு
முகவரி: புனித அந்தோனியார் ஆலயம், குமுழமுனை
தொலைபேசி இலக்கம்: 0762805135
இல: 12831

### பத்து ஆறுதல் பரிசுகளையும் பெற்றுக்கொண்டவர்கள்:

01 . டொ . ஜெனிதா
முகவரி: இல 51, முருகமூர்த்தி வீதி, நல்லூர், நெல்லியடி கரவெட்டி
சீட்டு இலக்கம்: 15445
தொலைபேசி இலக்கம்: 0776426886

02 . ற . சக்சிதா
முகவரி: 5ம் வட்டாரம், இரணப்பாலை
சீட்டு இலக்கம்: 14982
தொலைபேசி இலக்கம்: 0778535998

03. சா.கஜந்தா(லியோக்சன்
முகவரி: 3ம் வட்டாரம், அல்லைப்பிட்டி
சீட்டு இலக்கம்: 1001
தொலைபேசி இலக்கம்: 0764188440

04 . பு. அருந்ததி
முகவரி: இல – 171/1, Beach Road, Passaiyoor
சீட்டு இலக்கம்: 6821
தொலைபேசி இலக்கம்: 0774015189

05 . V. Dilani
முகவரி: 10ம் வட்டாரம், புங்குடுதீவு
சீட்டு இலக்கம்: 804
தொலைபேசி இலக்கம்: 0773825164

06 . ச. அனிற்றா ஜக்குலின்
முகவரி: இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
சீட்டு இலக்கம்: 8009
தொலைபேசி இலக்கம்: 0774082967

07 . தீ. எமிலியான்ஸ்
முகவரி: நாரந்தனை,தெற்கு ஊர்காவற்றுறை
சீட்டு இலக்கம்: 16976
தொலைபேசி இலக்கம்: 0765533328

08 . ச. யுகன்
முகவரி: இரணைமாதா நகர்
சீட்டு இலக்கம்: 507
தொலைபேசி இலக்கம்: 0772062105

09 . தவராஜா ஆகாஷ்
முகவரி: பருத்தித்துறைமுனை
சீட்டு இலக்கம்: 135
தொலைபேசி இலக்கம்: 0775644780

10 .T. தவக்குமார்
முகவரி: குலைமணி வீதி, கடைப்பிறை வீதி, யாழ்ப்பாணம்
சீட்டு இலக்கம்: 17234
தொலைபேசி இலக்கம்: 0778448449

# புனித பத்திரிசியார் கல்லூரி தரம் 1 இற்கான புதிய அனுமதி - 2027

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் புதிய அனுமதி 2027
2027 ஆம் ஆண்டு தரம் 1 இற்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2021 - 31.01.2022 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றுப் பத்திரத்துடன் நேரில் வந்து பிரதான அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 24.04.2026.**

- தரம் 1 இற்கான அனுமதி நேர்காணல் 18.07.2026 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

## j tWf;F tUe;J fpd;Nwhk;

கடந்த பாதுகாவலன் பத்திரிகையில் வெளியான 2025 ஆம் ஆண்டுக்கான யாழ் மறைமாவட்டப் பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு அறிக்கையில் 2025 இற்குப் பதிலாக 2024 எனத் தவறாகப் பதிவிட்டமைக்காக மனம் வருந்துகின்றோம்.

# விண்ணும் மண்ணும்

**கரவையூர்ச் செல்வம்**

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

***விண்ணும் மண்ணும்***

விண்ணும் மண்ணும் என்று இவ்வுலகைப் பிரித்துப் பார்த்தது, கிரேக் மெய்யியலைத் தழுவி இறையியலை உருவாக்கிய கத்தோலிக்க திருஅவை இது, இரு கிளைப்பாடு. மோட்ச இராச்சியம் விண்ணில் அல்ல: உனக்குள்ளேயே உண்டு. இயேசு இருகிளைப்பாட்டுச் சிந்தனையில் சிக்கியவர் அல்ல. அவரது வாழ்வும், அவர் எடுத்துரைத்த நற்செய்தியும், அவர் பயன்படுத்திய மொழியும் அதற்குச் சான்று. ஆயினும், அவர் பெரும்பாலும் உவமைகளிலும், உருவகங்களிலுமே தனது விடுதலை தரும் நற்செய்தியை நவில்கின்றார். "இவற்றையெல்லாம் இயேசு மக்கள் கூட்டத்திற்கு உவமை வாயிலாகவே உரைத்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு எதையும் பேசவில்லை" (மத் 13:34)

***உங்களுள் உள்ளது***

"இறையாட்சி எப்பொழுது வரும்?" (லூக். 17:25) என்று பரிசேயர் கேட்ட கேள்விக்கு, இயேசு கூறிய பதில்: "இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. இதோ, இங்கே அல்லது அதோ அங்கே! எனச் சொல்ல முடியாது. ஏனெனில், இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயற்படுகின்றது. (லூக். 17:21). இயேசு தெளிவாகவே சொல்லியுள்ளார்.

இறையாட்சி என்றால் என்ன? the Kingdon of God என்ற ஆங்கிலச் சொல்லையே தமிழில் இறையாட்சி என்று மொழி பெயர்த்துள்ளார்கள். கடவுள் வேறு இறையாட்சி வேறல்ல. இறையாட்சிதான் கடவுள். கடவுளின் வார்த்தை என்று சொல்லுகின்றோம். வார்த்தைதான் கடவுள். கடவுள் வேறு, வார்த்தை வேறல்ல. கடவுளின் சித்தம் என்று கூறுகின்றோம் சித்தம் வேறு கடவுள் வேறல்ல. கடவுள்தான் சித்தம் சித்தம் என்ற சொல்லையும், கடவுளின் திருவுளம் (உரோ 12:2) என்ற சொல்லையும் தவிர்த்து, திட்டம் என்ற வார்த்தையை நான் பயன்படுத்தி வருகின்றேன். கடவுளின் திருவுளம் என்ற சொற்றொடரும் கடவுளின் சித்தமும் ஒன்றுதான்.

பிரபஞ்சத்துள் ஓர் ஒழுங்கமைதி உண்டு. ஒரு உடைபடாத முழுமை உண்டு. கடவுள் புறத்தே இருந்து பிரபஞ்சத்தைப் படைத்தார் என்ற சிந்தனையில் நின்று மாறி, கடவுள் பிரபஞ்சத்தினுள் இருந்து பரிணமிக்கின்றார். பிறப்பிக்கின்றார் என்ற சிந்தனையுடையவன் நான். இது, இன்றைய அறிவியல் கூற்று.

கடவுளில் அகம் புறமென்று இல்லை. தானும் நானல்லதும் என்று இல்லை. கடவுள் முழுமையானவர். விடுதலைப் பயணத்தில் கடவுள் சொல்வதாக எழுதப்பட்டதென்ன? "இருக்கிறவராக இருக்கின்றவர்" (3:14) இந்த இருக்கின்றவராக இருக்கின்றவர்" பரிமாணத்தில் உள்ளிருந்து பிறப்பிப்பவராக இருக்கின்றார்.

இதைப் புரியாது "இறையாட்சி" என்ற சொல்லை "கடவுளின் இராட்சியமென" என்ற சொற்றொடரை நேரடிப் பொருள் கொண்டு (literal meaning) திருஅவை புறத்தில் ஒரு ராஜ்யத்தை, ஒரு முடியரசைக் கட்டியெழுப்பி, திருத்தந்தையை ஓர் அரசனாக்கி ( அரசி அல்ல) விட்டது. மறைமாவட்டங்கள் தோறும் சிற்றரசர் களையும் உருவாக்கி ஆட்சி செய்து வந்தது. இன்னமும் இந்நிலை முற்றாக மாறவில்லை. இயேசு கண்ட கனவு இதுவல்ல. இது மனிதர் கண்ட கனவு. அதிகாரத் திரு அவை கண்ட கனவு. இதனாலேயே சமயத்துள் திருஅவையுள் இன்று பொருள் முதல் வாதம் அன்றேல் உலோகாயுதம் (magnetism) புகுந்து விட்டது. இந்நிலையில் இருந்து திருஅவை மனம்மாறி, மக்களின் திருஅவையாகி, ஆட்சி செய்வோர் இயேசு கூறியது போலப் பணிவிடை செய்யும் தலைவர்களாக மாறவேண்டும். இது, ஒரு பாரிய கூட்டு மனமாற்றம். இந்தக் கூட்டு மனமாற்றத்திற்குத் தனிப்பட்ட மனமாற்றம் முன்னோடியாக செயற்பட வேண்டும். போப் பிரான்சிஸ் இப்படிப்பட்ட மனமாற்றத்திற்கு வித்திட்டுச் சென்றுள்ளார்.

***தன்னறிவு***

கத்தோலிக்க (கிறித்தவ என்றும் விரித்துக் கூறத் துணியலாம்) ஆன்மீக வரலாற்றில் தன்னறிவையிட்டுப் பேசியதாகப் பதிவில்லை. விதிவிலக்குகள் உண்டு. கடவுளை வெளியே பார்த்த திருஅவை தன்னுணர்வையும் தன்னறிவையும் பார்க்காமல் "ஆன்மீகம்" பேசியமையைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுதான். அதனால் ஓர் அறிவுமயமான ஆன்மீகத்தை (ஒப்பீட்டளவில் சொல்வதனால் ஆண்மீகம் என்ற சொல் பரவலாக்கப்பட்டது. அண்மையிலேயே) அறிவு வேறு உணர்வு வேறு என்று பிரித்த இருகிளைப் பாட்டில் இருந்து மனம்மாறி அறிவையும் உணர்வையும் இணைத்தே வாழவேண்டும். பரிணாமத்தை ஏற்றுக்கொண்டு, பரிணாமத்தில் கடவுள் பரிணமித்துக்கொண்டே இருக்கிறது என உணர்வுபூர்வமான அறிவு ஆன்மீகத்தை ஆழமாகப் பார்க்கத் துணை செய்யும். அதனாலேயே, இன்று நாம் ஆன்மீகம் பேசும் பொழுது முதலில் தன்னுணர்வில் இருந்து ஆரம்பித்து, தன்னறிவு பெறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றோம். தன்னுணர்விலிருந்து தன்னறிவு பெறுகின்றோம்.

**"தன்னை அறியத் தனக்கொடு கேடில்லை**
**தன்னை அறியாமல் தன்னைக் கெடுக்கின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத்தான் இருந்தான்**

(2355) என்று இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருமூலர் திருமந்திரத்தில் எழுதியுள்ளார். தன்னை அறிவதால் ஒருவருக்கும் எந்தக் கேடுமில்லை. ஆனால், தன்னைத் தானே அறியாமல் இருப்பின், அவனுக்கு - அவளுக்குக் கேடுதான். தன்னறிவைக் கொண்டவன் தன்னை மீட்டுக் கொள்வான் என்று திருமந்திரத்திற்குப் பொருள் கொள்ளலாம்.

என்னை என்னில் இருந்து, எனது அகச் சிறைகளில் இருந்து, எனது அடிமைத் தனத்திலிருந்து மனம்மாறி என்னை மீட்பதற்குத் தன்னறிவு தேவை. நான் யார் எனத் தெரியாது, நான் எப்படிப்பட்ட நிலையில் இப்பொழுது நிற்கிறேன் என்று அறிந்து நன்கே புரிந்து, ஏற்றுக்கொள்ளாமல் மனம் மாற வழியில்லை, மீட்பில்லை.

அக யாத்திரை பற்றி ஏற்கனவே கூறியிருந்தேன். அதை வலுவூட்டுவதாக "கடவுளுள் நீ ஆழமாகச் செல்வதனால், உனக்குள் நீ சிறிதளவாவது போக-வேண்டும்" என்று 14ம் நூற்றாண்டு ஞானி மைஸ்ரர் எக்காட் எழுதியுள்ளார். இவர் கத்தோலிக்க திருஅவையைச் சேர்ந்தவரும், டொமினிக்கன் துறவற சபையில் இணைந்தவரும், சிறந்த இறையியலாளரும் ஆவார். இதை ஐந்தாம் திருமுறையில் உள்ள தேவாரம் (984) மேலும் உறுதிப்படுத்துகின்றது.

**"தன்னில் தன்னை அறியும் தலைமகன்**
**தன்னில் தன்னை அறியியல் தலைப்படும்**
**தன்னில் தன்னை அறிவிலன் ஆயிடில்**
**தன்னில் தன்னையும் சார்ந்தற்கு அரியனே**

அன்பில் வழி நின்று கடவுள் எம்முன் தன்னை வெளிப்படுத்துகிறார்"- என்று சுவாமி முக்தானந்தா கூறியுள்ளார். இங்கு, அன்பையும் தன்னறிவையும் இணைத்துக் கூறுகின்றார் சுவாமி முக்தானந்தா.



கத்தோலிக்க திருஅவையை சேர்ந்தவரும், றப்பிஸ்ற் (Trappist) ஆழ்மௌனத் துறவியும் சென்ற நூற்றாண்டின் தலை சிறந்த ஆன்மீக எழுத்தாளருமான தோமஸ் மேர்ட்டன் பார்வையில்: "நான் கடவுளைக் கண்டால், என்னைக் காண்பேன்: உண்மையான என்னை நான் கண்டால் கடவுளைக் காண்பேன்"

உண்மையாக நானுக்கு விளக்கம் தந்துள்ளேன், மாறியது எனது பாதை மாற்றியவர் யாரோ"இயல். 5 2024 பார்க்கவும். கொமஸ் மோட்டன் எழுதிய - கடவுளைக் கண்டால் என்னைக் காண்பேன்.... என்னைக் கண்டால் கடவுளைக் காண் பேன்" என்ற சொற்றொடர்கள் மைஸ்ரர் எக்காட் தனது மறை உரைகளில் எழுதிய ஒரு வசனம் ஞாபகம் வருகின்றது. "எந்தக் கண்ணால் நான் கடவுளைக் காண்பேனோ, அதே கண்ணால் கடவுள் என்னைக் காண்கிறார். கடவுளின் கண்ணும் எனது கண்ணும் ஒன்றே. ஒரு பார்வை: ஓர் அறிவு, ஓர் அன்பு"

இவர்கள் இருவருமே, உருவகத்தில் எழுதி உள்ளார்கள். எங்கள் அகக் கண்ணைக் குறிப்பிடுகிறார்கள். அப்பர் தேவாரத்தில் பாடுகிறார்.

***'தேடொனத் தேவதை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்'***

இவ்வளவு மேற்கோள் கனவு இக்கட்டுரையில் ஏன் காட்டினேன்? உங்களைப் பிரமிக்க வைப்பதற்கா? இல்லை. எனது மொழியில் நானுரைத்தால் "இவன் யார்" இவனென்ன ஞானியோ? இவனுக்கு என்ன அதிகாரம் உண்டு"என்று கேட்போர் பலர். உண்மைதான்.

நான் ஓர் ஞானியல்ல. என்னிடம் எந்த அதிகாரமும் இல்லை. ஆனால் எனது பல வினாக்களோடு தான் தேடுகிறேன். என்னுள்ளே தேடுகிறேன். அப்பர் கூறியது போல "காண்பேன்"என்ற ஓர் எதிர்நோக்கு உண்டு.

நீங்களும் உங்களுள் தேடுங்கள். இத்தவக் காலத்தில் உங்கள் உணர்வில் உங்களை அறிந்து ஏற்றுக் கொண்டு மனம் மாறித் தேடுங்கள். காண்பீர்கள். இது, ஒரு நல்ல தவ முயற்சி.

***தாகம்***

நாமெல்லோரும் ஒரு தாகத்துடன் பிறக்கின்றோம். இந்தத் தாகம் என்னவென்று அடையாளம் காணாத பொழுது இத்தாகத்தைத் தீர்க்க மனிதர் பல்வேறு திசைகளில் செல்லலாம். கோடிக்கணக்கான மக்கள் அவ்வாறு செல்கிறார்கள். இதனால் அவர்களும் பாதிக்கப்பட்டு மற்றவர்களும் பாதிக்கப் படுகிறார்கள். பணத்தாகம், பதவித் தாகம், புகழ்த் தாகம், மதுத் தாகம், பாலியல் புணர்ச்சித் தாகம், பொய் சொல்லத் தாகம், கனவுத் தாகம், மற்றவர்களை அடக்கி ஆட்சி செய்யத் தாகம், தன்னிச்சையாக வாழத் தாகம், ஆவலாதி அவதூறு பேசுவதற்குத் தாகம், சுய விளம்பரத் தாகம் என்று இந்தப் பட்டியல் நீளும். இவற்றிற்கு அடிமையாகி விட்டால் மனிதம் அழிந்து விடும். மேற்கூறிய அனைத்தும் புறத்தே இருந்து வருபவை. எதுவும் அந்த ஆழமான அகத் தாகத்தைத் தீர்க்காது. தீர்க்காத பொழுது மீண்டும் மீண்டும் அவற்றையே நாடுவது தான் அடிமைக்கு வழிகோலுவது. வரையறுக்கப்பட்ட எவையும் வரையறுக்கப்படாத ஒன்றுக்குத் தீர்வாகாது,

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்ற வள்ளுவனின் குறள். அந்த அன்பையே நோக்கியது தான் அந்த அகத் தாகம். "என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை நான் உங்களிடம் சொன்னேன்" (யோவான் 15:11) என்று இயேசு மொழிந்த நிறைவான மகிழ்ச்சியை நோக்கிய தாகம். நான் முழுமையடையாதவன். ஆனாலும் உடைபடாத முழுமை என்னுள் உண்டு. அந்த முழுமையை நோக்கிய தாகம். இதையே முன்னர் நான் அகத் திருயாத்திரை என்று கூறினேன். மனம்மாறி இத்தாகத்தை அடையாளங் கண்டு இத்தவக் காலத்தில் உங்கள் அக யாத்திரையை ஆரம்பியுங்கள். நானும் அவ்வழி பயணிக்கின்றேன்.

***தவக்கால அழைப்பு***

நோன்பிருங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் (மனதிற்கும்) நன்மை பயக்கும். சிலுவையின் பாதையில் சிந்தியுங்கள். இயேசுவைப் புரிந்து கொள்வீர்கள். அவரின் விடுதலைச் செய்தியை அறிந்து கொள்வீர்கள். ஆயினும், இவைமட்டும் முழுமையான மனமாற்றத்தைத் தராது. இந்தக் காலத்தில் சத்தத்திலிருந்து மௌனத்திற்கு உங் களை நீங்களே அழையுங்கள். ஒவ்வொரு நாளும் பதினைந்து நிமிடங்களாவது தனிமையில் - அதாவது உங்களோடு நீங்கள் மௌனத்தில் அமருங்கள். உனக்கு நீயே பிரசன்னமாயிரு. கடினம். ஆனால், மிகுந்த பயன் உண்டு. நினைவில் கொள்ளுங்கள். சத்தத்தில் பிசாசு (இரு கிளைப்பாடு) மௌனத்தில் கடவுள். கடவுளின் மொழி மௌனம் என்று சிலர் உருவகத்தில் சொல்வார்கள். யதார்த்தத்தில் அதில் ஓர் உண்மை உண்டு.

# க.பொ.த. சா/த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும் வினாப்பத்திரம் -01

## மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. எழுத்து வடிவம் பெற்ற இறைவெளிப்பாட்டு நூல்.
1. திருவிவிலியம் 2. திருக்குறள்
3. பகவத்கீதை 4. திருக்குர்ஆன்

02. திருவிவிலியம் கிறிஸ்தவர்களின் அதிமேன்மையான.... நூல் ஆகும். கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது.
1. வாழ்வின் 2. புனித
3. இறைவாக்கு 4. நம்பிக்கை

03. திருவிவிலியத்திலுள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை.
1. 72 2. 71 3. 73 4. 75

04. திருவிவிலியம் பல நூல்களைக் கொண்ட ஒரு .. ஆகும். கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது.
1. களஞ்சியம் 2. வெளியீடு
3. பொக்கிசம் 4. நூலகம்

05. திருவிவிலியத்தின் பிரதான மற்றும் துணை ஆசிரியர்கள்.
1. இறைவன், மனிதன் 2. மனிதன், இறைவன்
3. இறைவன், ஆவியானவர் 4. மனிதன், ஆவியானவர்

06. திருவிவிலியம் எழுதப்பட்ட காலப்பகுதி.
1. கி.மு. 950 -கி.மு. 900 2. கி.மு. 950 - கி.பி. 100
3. கி.மு. 900 - கி.மு. 100 4. கி.மு. 950 - கி.பி. 120

07. பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை.
1. 27 2. 39 3. 46 4. 47

08. பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்.
1. 4 2. 3 3. 6 4. 5

09. பழைய ஏற்பாட்டு நூல்களில் வரலாற்று நூல்களின் எண்ணிக்கை.
1. 16 2. 7 3. 5 4. 17

10. பழைய ஏற்பாட்டு நூல்களில் ஞான நூல்களின் எண்ணிக்கை.
1. 5 2. 7 3. 16 4. 17

11. இறைவாக்கினர் நூல்களின் எண்ணிக்கை.
1. 7 2. 16 3. 5 4. 17

12. பழைய ஏற்பாட்டிலுள்ள வெளிப்பாட்டு இலக்கிய நூல்களின் எண்ணிக்கை.
1. 1 2. 17 3. 16 4. 5

13. பழைய ஏற்பாட்டில்.... வரலாறு விளக்கப்பட்டுள்ளது. கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது.
1. வாழ்வின் 2. மீட்பின்
3. படைப்பின் 4. செல்வச் செழிப்பின்

14. மக்களால் விரும்பப்படுகின்ற இரு வரலாற்று நூல்கள்.
1. ரூத். நெகேமியா 2. எஸ்தர், எஸ்ரா
3. ரூத். எஸ்தர் 4. நெகேமியா, எஸ்தர்

15. தனிநபர் அல்லது இனத்தின் பிரச்சினைகளும் அவற்றிற்குரிய தீர்வுகளும் இறைகண்ணோட்டத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதனை வெளிக்காட்டும் வரலாற்று நூல்கள் இரண்டு.
1. யோசுவா, ரூத் 2. தோபித்து, யூதித்து
3. யூதித்து, எஸ்தர் 4. ரூத், எஸ்தர்

16. எஸ்ரா, நெகேமியா நூல்களில் இஸ்ராயேலர்.... நாடுகடத்தப்பட்ட பின், திரும்பவும் தம் சொந்த நாட்டுக்கு வந்து சமய, சமூக புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டமை தொடர்பான விளக்கங்கள்.
1. பபிலோனியாவுக்கு 2. சீரியாவுக்கு
3. அசீரியாவுக்கு 4. எகிப்துக்கு

17. பழைய உடன்படிக்கையின் வரலாற்று நூல்கள்... கதைகள் எனவும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இடைவெளிக்குப் பொருத்தமானது.
1. வேத நூல்கள் 2. வேத வரலாற்று
3. ஞானநூல்கள் 4. புனைகதைகள்

18. கத்தோலிக்க திருமறை ...................... இனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இடைவெளிக்குப் பொருத்தமானது.
1. வாழ்க்கையை 2. வீழ்ச்சியை
3. இறைவார்த்தை 4. வெளிப்பாடுகள்

19. புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக எழுதப்பட்ட நூல். 1. யோவான் நற்செய்தி 2. லூக்கா நற்செய்தி
3. மத்தேயு நற்செய்தி 4. மாற்கு நற்செய்தி

20. புதிய ஏற்பாட்டு நூல்களுள் தூய மாற்கு நற்செய்தி நூல் எழுதப்பட்ட காலப்பகுதி.
1. கி.பி. 60 - 66 2. கி.பி. 64 - 68
3. கி.பி. 64 - 66 4. கி.பி. 60- 70

21. "நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும் இவ்வார்த்தையே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி" இப்பகுதி அடங்கியுள்ளது.
1. 1பேதுரு 1:25 2. 2பேதுரு 1:25
3. 3பேதுரு 3:25 4. 2பேதுரு 2:25

22. தொடக்க நூல் எழுதப்பட்டதன் நோக்கம்.
1. உலகின் ஆரம்பம் பற்றிக் கூற
2. படைப்புகளில் என்ன உள்ளன என்பது பற்றி கூற
3. கடவுளே இவ்வுலகின் படைப்பாளி எனக்கூற
4. மனிதன் படைப்புப் பற்றிக் கூற

23. படைப்புப்பற்றிய முதல் கதை கூறும் குருக்கள் பாரம்பரியத்தில் விசேட கவனம் செலுத்தப்படும் விடயங்கள்.
1. விழாக்கள், பலிகள் 2. வழிபாடுகள். சடங்குகள்
3. நோன்பு, தர்மம் 4. பவனிகள், யாத்திரைகள்

24. ஈசாக் பலியிடுதல் எந்த மரபிற்குரிய நிகழ்வாகும்.
1. யாவே 2. ஏலோகிம்
3. இணைச்சட்டம் 4. குருக்கள்

25. ஐந்நூலுக்குரிய வேறுபெயர்கள் அல்லாதது.
1. பஞ்சாகமம் 2. வேதாகமம்
3. தோரா 4. நீதிச்சட்டம்

26. "நீ நின்று கொண்டிருக்கின்ற இந்த இடம் புனிதமான நிலம்" என்று இறைவனால் யாருக்குக் கூறப்பட்டது.
1. மோசே 2. ஆபிரகாம்
3. ஆதாம் 4. காயீன்

27. யூத திருவிவிலியத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை.
1. 27 2. 39
3. 66 4. 73

28. யூதர்களும் கிறிஸ்தவர்களும் பயன்படுத்திய எபிரேயப்பிரதி.
1. கிரேக்கப்பிரதி 2. இலத்தீன் பிரதி
3. அரமெயிக்பிரதி 4. மசரோடிக் பிரதி

29. எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு எந்த ஆண்டில் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
1. கி.மு. 4ம் நூற்றாண்டு 2. கி.மு. 3ம் நூற்றாண்டு
3. கி.மு. 2ம் நூற்றாண்டு 4. கி.மு. 1ம் நூற்றாண்டு

30. செப்துவாஜிந் மொழிபெயர்ப்புக்குக் காரணமான அரசன்.
1. அந்தியோக்கு எப்பிபானுஸ் 2. எஸ்ரா
3. நெகேமியா 4. 2ம் தொலமி

31. இணைத்திருமுறை நூல் அல்லாதது.
1. தோபித்து 2. சாலமோனின் ஞானம்
3. திருப்பாடல்கள் 4. சீராக்கின் ஞானம்

32. 'நபி' என்ற எபிரேயச் சொல்லின் பொருள்.
1. இறைவனைப் பற்றிக் கூறுபவர்
2. இறை சித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பவர்
3. இறைவனைப்பற்றிப் போதிப்பவர்
4. எதிர்காலத்தில் நடப்பவை பற்றி முன்னறிவிப்பவர்.

33. "ப்ரோபேரஸ்" என்ற கிரேக்க மொழி குறிப்பது.
1. இறைவாக்கினர்கள் 2. நீதிபதிகள்
3. அரசர்கள் 4. குலமுதுவர்கள்

34. பின்வரும் இறைவாக்கினருள் எழுத்து வடிவம் பெற்றவர்.
1. நாத்தான் 2. எசாயா
3. எலியா 4. எலிசா

35. "என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத்தெரியாதே, சிறுபிள்ளை நானே" எனக் கூறியவர்.
1. எசாயா 2. எரேமியா
3. எசேக்கியேல் 4. ஆமோஸ்

36. பபிலோனிய அடிமைத்தனத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் மத்தியில் பணிபுரிந்த இறைவாக்கினர்.
1. எசேக்கியேல் 2. ஆமோஸ் 3. ஓசேயா 4. நாத்தான்

37. இறைவாக்குப் பணிக்கு எம்மை அழைக்கும் அருளடையாளம்.
1. குருத்துவம் 2. திருமுழுக்கு
3. திருமணம் 4. உறுதிபூசுதல்

38. நாம் ஆலயத்தில் பக்தியுடன் நடந்துகொள்வதற்கான பிரதான காரணம்.
1. இறைவனை வழிபடுவதால்
2. திருவிவிலியம் இருப்பதால்
3. நற்கருணை வடிவில் இயேசுவின் பிரசன்னம் இருப்பதால்
4. தினமும் திருப்பலி நடைபெறுவதால்

39. காட்சி மூலம் இறைவாக்குப் பணிக்கு அழைக்கப்பட்ட இறைவாக்கினர்.
1. ஆமோஸ் 2. எலியா 3. ஓசேயா 4. எசாயா

40. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்களின் பண்புகள் அல்லாதது.
1. பணி செய்து வாழ்பவர் 2. தியானத்தில் ஆழ்ந்திருப்பவர்
3. குழுவாகப்பணி செய்பவர்
4. தமது தூதுப்பணியை உறுதிப்படுத்த அடையாளங்கள் செய்பவர்.

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 – 1 | 11 – 4 | 21 – 1 | 31 – 3 |
| 2 – 2 | 12 – 1 | 22 – 3 | 32 – 2 |
| 3 – 3 | 13 – 2 | 23 – 2 | 33 – 1 |
| 4 – 4 | 14 – 3 | 24 – 4 | 34 – 2 |
| 5 – 1 | 15 – 4 | 25 – 2 | 35 – 2 |
| 6 – 2 | 16 – 1 | 26 – 1 | 36 – 1 |
| 7 – 3 | 17 – 2 | 27 – 2 | 37 – 2 |
| 8 – 4 | 18 – 3 | 28 – 4 | 38 – 3 |
| 9 – 1 | 19 – 4 | 29 – 2 | 39 – 4 |
| 10 – 2 | 20 – 3 | 30 – 4 | 40 – 1 |



# சமூகத்தொடர்பாடலில் 150 வருட கலங்கரை விளக்கு

யாழ்ப்பாணத்தின் அச்சு ஊடகத்துறையில், கத்தோலிக்க தமிழ்ப் பரப்பின் வரலாற்றுப் பேழையில் ஒரு வைரமாகத் திகழும் பாதுகாவலன் கத்தோலிக்க இதழ் தனது ஊடக பயணத்தில் 150 வது ஆண்டில் தடம் பதிப்பது என்பது ஈழத்து தமிழ் ஊடகத்துறைக் கும், யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருஅவைக்கும் ஒரு வரலாற்றுப் பெருமிதமாகும். பிரித்தானிய காலனித் துவ ஆட்சிக்காலகட்டமான 1876 ஆம் ஆண்டில் அன்றிருந்த ஆர்வலர்களால் வித்திடப்பட்ட இப் பத்தி ரிகை மிகச் சவாலான காலகட்டங்களைக் கடந்து ஒன்றரை நூற்றாண்டு காலமாக இன்றும் எம் மத்தியில் துடிப்புடன் பயணிப்பதையிட்டுக் கத்தோலிக்க தமிழ்ச் சமூகம் பேருவகையடைகின்றது.

நவீன தொழில்நுட்பங்கள் இல்லாத காலத்திலேயே அச்சு இயந்திரங்கள் மூலம் தமிழ் மொழியை வளர்த் தெடுத்த பெருமை இதற்குண்டு. இது கத்தோலிக்க பின்புலத்தைக் கொண்டிருந்தாலும், தமிழ் இலக்கி யம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது.

***போர்க்காலத்தையும் பொருளாதாரத் தடைகளையும் தாண்டி***


சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் முப்பதாண்டுகளுக்கும் மேற்பட்ட உள்நாட்டு இன மோதல் யாழ்ப்பாணத்தை உலுக்கிய போது வடக்கில் பல ஊடகங்கள் மௌனித்தன. ஆயினும் இறைவ-னின் பாதுகாப்புடன் பாதுகாவலன் அச்சுறுத்தல்கள், மூலப்பொருட்களுக்கான தடைகள், இடப்பெயர்வுகள், மின்சாரம் மற்றும் தொலைபேசிகள் அற்ற நிலை போன்ற இடர்களைக் கடந்து தொடர்ந்து வெளிவந்தது. பாதுகாவலன் வெறும் செய்திகளை மட்டும் தரவில்லை. போரினால் துயருற்று, வலுவிழந்து, மனமுடைந்த மக்களுக்கு ஆன்மீக ஆறுதலையும், நம்பிக்கையையும் வழங்கியது. இயேசுக்கிறிஸ்துவின் வழியில் பாதிக்கப்பட்ட மக்களின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளுக்காகவும், சமூக நீதிக்காகவும் குரல் கொடுக்கும் தளமாக இது என்றும் திகழ்கின்றது.

"வாள் முனையை விட பேனாமுனை வலிமை யானது" என்பதற்கு பாதுகாவலன் ஓர் வாழும் உதாரணம். குண்டுச்சத்தங்கள் மத்தியிலும் அடங்காமல் ஒலித்தன காவலனின் அச்சு இயந்திரங்களின் சத்தம். உண்மையில் இது ஆயுதப்போராட்டத்திற்குள் நிகழ்ந்த ஒரு அறவழிப் போராட்டமே.

***எதிர்காலத்திற்கான வாழ்த்து!***

150 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கத்தோலிக்க மறைக்கும், சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகளை செய்து வரும் பாதுகாவலன் பத்திரிகை இனிவரும் காலங்களிலும் உண்மை, நம்பிக்கை மற்றும் அன்பின் குரலாக மேலும் பல நூற்றாண்டுகளுக்கு மக்களுக்கு சேவை புரிந்து, மக்களை வழிநடத்த இறைவன் அருள் புரிவாராக. இவ்வேளையில் 150 வருடங்களாக பாதுகாவலன் பத்திரிகையின் பொருட்டுத் தம்மை அர்ப்பணித்த அதன் ஆசிரியர்கள், பணியாளர்கள், மற்றும் வாசகர்கள் பெருமையுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு எமது பாராட்டுகள். அவர்களின் அர்ப்பணிப்பால் இது சாத்தியமானது. நவீன ஊடகங்கள் வணிக நோக்கம் கருதி நகரும் வேளையில் நிலை பேறான அமைதிக்கான சூழலை உருவாக்கும் பயணத்தில் அறநெறிச் செய்திகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களுக்கூடாகத் தன் பணிதொடர சமூகத் தொடர்பு ஆண்டில் பாதுகாவலனை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

*போ. இ. யேசுதாசன்*
*செயலாளர்*
*பொது நிலையினர் கழகம்,*
*யாழ்மறை மாவட்டம்.*



# மாற்றம் தேடும் இலங்கை சமூகத்திற்கான நம்பிக்கை சிலுவை வழி வாழ்வே!

இன்றைய இலங்கையில் சமூக வாழ்க்கை பல்வேறு சவால்களால் சூழப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்புப் பற்றாக்குறை, குடும்பப் பிளவுகள், இளைஞர்களின் எதிர்கால அச்சம், சமூக அநீதிகள் ஆகியவை மனிதர்களின் உள்ளங்களை சோர் வடையச் செய்கின்றன. இத்தகைய சூழலில் மாற்றம் தேடும் சமூகமாக நாம் எந்தப் பாதையைத் தேர்ந் தெடுப்போம்? நம்பிக்கையற்ற நிலையை நோக்கி வீழ்வோமா? அல்லது நம்பிக்கையை அளிக்கும் இறை வழியை அணுகுவோமா? மானிடரை மீட்டெடுக்க இறைமகன் இயேசு தேர்ந்தெடுத்த சிலுவைப் பாதை எமக்கு வாழ்வுப் பாதையாக என்றும் வழிகாட்டும் என்பதே எங்களது நம்பிக்கை.

வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பு அதனை சரியான முறையில் அமைத்துக் கொள்வது ஒவ்வொரு வரின் கடமை. மனிதன் சமூகத்தில் வாழ்வதால், அவன் தனித்து நிற்பதில்லை. பிறருடன் தொடர்புடையவன். ஆனாலும், உண்மையான நிறைவு இறைவனின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து வாழும் வாழ்விலேயே உள்ளது. அந்த இறை விருப்பத்தின் உச்ச வெளிப்பாடு இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைப் பலியிலே தெளிவாகி-றது. "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மத் 16:24) என்ற ஆண்டவரின் அழைப்பு இன்று நமக்கான அழைப்பாகும். சிலுவை என்பது வெறும் துன்பத்தின் அடையாளமல்ல அது தியாகத்தின், அன்பின், கீழ்ப்படிதலின் சின்னமாகும். யூதர்களின் வரலாற்றில் அவமானத்தின் கருவியாக இருந்த சிலுவை, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மூலம் வெற்றியின் சின்னமாக மாறியது. மரணத்தை வென்ற உயிர்த்தெழுதல் சிலுவைக்குப் புதிய அர்த்தத்தை அளித்தது.

இன்றைய இலங்கை மக்களின் வாழ்க்கையி லும் பல சிலுவைகள் உள்ளன. வறுமை, நோய், இழப்பு, பிரிவு, அநீதி, ஏமாற்றம் போன்ற அனைத்தும் மனித உள்ளத்தை அழுத்துகின்றன. ஆனால் சிலுவை நமக்கு சொல்லும் பாடம், துன்பம் கடவுளின் தண்டனை அல்ல அது மீட்பிற்கான வழியாக மாறக்கூடியது. துன்பத்தை அன்போடு ஏற்றுக்கொண்டு, உண்மைக்காக நிலைத்து, பிறருக்காக வாழும் போது தான் சிலுவை வெற்றியின் பாதையாகிறது. புனித பவுல் "சிலுவையைப் பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" (1கொரி 1:18) என்று வலியுறுத்துகிறார். உலகக் கணக்கில் சிலுவை தோல்வி போலத் தோன்றலாம் ஆனால் இறை கணக்கில் அது மீட்பின் உச்ச வெற்றி. இதனை உணராதபோது நாம் துன்பங்களைப் பார்த்து அஞ்சுகிறோம் அவற்றை சாபம் எனக் கருதுகிறோம். உண்மையில், சிலுவை இல்லாத வாழ்வு ஆழமற்ற வாழ்வாகும்.

மாற்றம் தேடும் இலங்கை சமூகத்திற்குத் தேவையானது அரசியல் மாற்றம் மட்டுமல்ல உள மாற்றம். அந்த உளமாற்றம் சிலுவையின் அடியில் தொடங்குகிறது. குடும்பங்களில் செபவாழ்வு உயிர்ப்பிக்கப் பட வேண்டும். இளைஞர்களில் தியாக மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டும். அநீதிக்கு எதிராக நியாயத்தின் குரல் எழுப்பப்பட வேண்டும். மன்னிப்பு, சமாதானம், ஒற்றுமை ஆகியவை சமூகத்தின் அடித்தளமாக அமைய வேண்டும். சிலுவையில் விரித்த கரங்களோடு நிற்கும் கிறிஸ்து ஒவ்வொருவரையும் அழைக்கிறார். அவர் துன்பத்தை நீக்குவதாக அல்ல, துன்பத்திற்கு அர்த்தம் அளிப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். எனவே, மாற்றம் தேடும் இலங்கை சமூகமாகிய நாம் சிலுவை வழி வாழ்வைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தப் பாதையில் நடந்தால் நம் கண்ணீர் நம்பிக்கையாக மாறும். நம் தோல்வி வெற்றியாக மாறும் - நம் வாழ்வு இறைவனுக்குப் பிரியமான சாட்சியாக விளங்கும். சிலுவை வழி வாழ்வே இன்றைய இலங்கைக்கான உண்மையான நம்பிக்கையாகும்.

**அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி**

# இறை ஒளியை நோக்கி நாம் சமூகத்தொடர்பில் நகர்வோம்

ஒளியினை நோக்கியே - எமது
இறைபணி தொடர வேண்டும்
வழியினைத் தேடியே - எமது
விழிகளும் நாடவேண்டும்
அழிவினைச் சுமந்தே - எமது
காலநேரங்கள் நகரும்போது
அழியாத வாழ்வுக்காக - எமது
சமூகத் தொடர்புகள் துலங்க வேண்டும்

கானக அடர்த்தியிலே - காரிருள்
உறைய வேண்டும்
கிளைகளின் அசைவினிலே -
வெள்ளொளி மிளிர வேண்டும்
கதிரவனின் வரவினிலே -
பூமொட்டுக்கள் மலர வேண்டும்
எம்மவர்களின் வாழ்விலே -
சமூகத் தொடர்புகள் மிளிரவேண்டும்

பாவிகளின் வழியினிலே
படுகுழிகள் நெருங்கி வரும்
தாவிடும் எமது ஆன்மா - மரணத்தில்
ஊன்றும் போதும்
சாவிலும் வாழ்விலும்
இறைவார்த்தை என்றென்றும்
காவிடும் கழுகென - இறைவன்
அருள் எமைத்தாங்கும்

இன்னல்களில் மிதக்கும் - எமது
சமூகத்தொடர்பு நடைமுறைகளில்
இன்பங்களைக் காணபோம் -
இறைத்திட்டத்திற்கமைவாக
துன்பங்களைத் தாங்குவோம் - தூய
இறைவனின் ஆசீரில்
என்றுமே எமைத்தாங்கும் -
இறையருள் பெற்ற நெஞ்சங்களாக

மரணத்தின் விளிம்பிலே - எமது
மனிதர்களின் நெஞ்சங்கள்
கரம் கூப்பித் தேடுவார் -
இறைவனிடம் தஞ்சம்
இருளினில் பரவி நின்று -
சிறிய ஒளிகளுக்கு அஞ்சி
சிறிய பூச்சியைப் போல் -
கிருபைக்காகக் கெஞ்சுவார்கள்



மண்ணகத்தின் உயிர்களை மீட்டிட -
தம்முயிரைத் தந்தவர்
மனித மீட்புப் பணியில் - தமது
செந்நீரை முழுமையாக ஈந்தவர்
கல்மலை மீதினிலே - ஒளியாகக் காட்சி தந்தவர்
மனித மீட்புப் பணிக்காக - மானிடமகனாக
அவதாரம் எடுத்தவர்

கயவர்களை நேசித்து - இவ்வுலகில் மனித
இதயங்களை வெல்வோம்
கஸ்டப்படுவோரைச் சந்தித்து - கைகொடுத்துக் காப்பாற்றுவோம்
ஆயனாக வந்த இயேசுவின் வழியில் எமது பணியைத் தொடர்வோம்
இயேசுவே, எமது மீட்பர் - எமது சமூகத் தொடர்புகளை
முன்னெடுப்போம்

**வன்னி வாழ் இதயம்**

**சுருக்கம் நெருக்கமாக...**

உலகம் இன்று உள்ளங்கைகளில் உருள்கின்றது. அயல்நாட்டுச் செய்தி அடுத்தவீட்டுச் செய்திபோலாகிற்று. எம்மவர்க்கு பல்மொழிகள் கற்பது இன்று பஞ்சைவிட லேசானது. பரந்து விரிந்த உலகமே நெருங்கிவர, பண்பட்ட மனது மட்டும் சுருக்கிவிட்டது சக மனிதனை சாதி, மதம், இனம், மொழியென்று எட்ட வைத்து எமது வாழ்க்கை நகர்கின்றது. மனிதனிடம் காட்டும் நெருக்கமே கடவுளிடம் காட்டும் நெருக்கமாகும். எமது இதயத்தை விரிப்போம். பரந்துவிரிந்த மனதுடன் மனிதர்களுடனான நெருக்கத்தை எம் வாழ்நாட்களில் கொண்டிருப்போம்.

**எரின் டனுயா உமாகர்**

அன்பின் மகிழ்வு

## சமூகத் தொடர்பாடல் ஆண்டு

*( சென்ற இதழின் தொடர்ச்சி..)*

# இயேசு ஒரு சிறந்த தொடர்பாளர்



அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

சமூகத்தொடர்பு ஆண்டு: இயேசு, ஒரு சிறந்த தொடர்பாளர் ஒரு முறை ஒரு குடும்பத் தகராறில், ஒருவர் கோபத்தில் ஒரு வார்த்தை கோபக்கனல் வீச வெளியேவிட்டார். அவரின் சொற்கள் கத்திபோல் அந்த வீட்டில் இருந்தவர்களை வெட்டியது. உடனே அவர் அங்க இருந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டார், ஆனாலும் அவரின் வார்த்தைகளால் அந்த வீட்டின் அமைதி குலைந்தது. பின்னர் அதே வீட்டில் இருந்த ஒரு வயதான அம்மா மிக மெதுவாக அவரைப் ஸ்பார்த்துச் சொன்னார்: "நீ பாவித்த வார்த்தைகள் தான் அமைதியைக் குலைத்தது. உன் மென்மையான வார்த்தைகள் தான் அமைதியை மீண்டும் கொண்டு வரும்". சொற்கள் இப்படித்தான். காயப்படுத்தவும் முடியும் குணப்படுத்தவும் முடியும். மற்றவரின் வாழ்வை வளம்படுத்தும் வார்தைகளைப் பயன்படுத்துவதில் நமக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து.

வேதாகமத்தில் இயேசு பாவித்த வார்த்தைகளைப் பார்த்த மக்கள் இவ்வாறு சொல்வார்கள்: "அவரைப் போல எவரும் என்றுமே பேசியதில்லை" (யோவான் 7:46). அவர் பேசும்போது, அவர் வார்த்தைகள் ஒருபோதும் அதிகாரத்தைக் காட்டுவதற்கான வார்த்தைகளாக இருக்கவில்லை. தந்தையின் அன்பை வெளிப்படுத்தும் மொழியாக இருந்தது. அவர் சொற்களை ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை மாறாக மருந்தாகப் பயன்படுத்தினார். அவரின் மொழி அதிகாரத்தின் வெளிப்பாடு அல்ல மாறாக அன்பின் வெளிப்பாடு. அவர் பேசும்போது மக்கள் தாழ்ந்து போகவில்லை, உயர்ந்து போனார்கள். அவர் திருத்தும்போதும் மனிதன் சித நிப்போகவில்லை, திரும்பி வரத்தொடங்கினான். இதுதான் இயேசுவின் தொடர்பாடலின் வெற்றியாகும்.

***இயேசுவின் தொடர்பாடல் முறையின் இரகசியம்:***

இயேசு விபசாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பெண்ணிடம் காட்டிய அணுகுமுறையானது நாம் எம் குடும்பங்களில் பயன்படுத்தப்படவேண்டிய ஓர் அணுகு முறையாகும். இயேசு ஒருவரைத் திருத்தும் போது அது "அவமானப்படுத்தும் திருத்தம்" அல்ல மாறாக அது "மீட்பளிக்கும் திருத்தம். அவரின் அணுகுமுறையானது மனிதனை இழிவுபடுத்தாமல், தவறைச் சுட்டிக்காட்டும் அணுகுமுறையாகும். நாம் சில நேரம் "நீ இப்படிதான்" என்று ஒருவரின் முழு அடையாளத்தையே கிழித்துப் போடுகிறோம். இயேசு பாவத்தைச் சொல்கிறார், ஆனால் மனிதனைக் "கைவிடமாட்டேன்" என்று சொல்லி விடுகிறார். இதுவே பழிபோடாமல், மாற்றத்திற்கான பாதை யைத் திறத்தல் என்ற சொல்லாடல் அணுகுமுறையாகும்.

பழி போடுவது கடந்த காலத்தைப் பிடித்து இழுக்கும். இது நம் குடும்பங்களில் பின்பற்றப்பட வேண்டிய ஓர் அணுகுமுறை யாகும். குறிப்பாக நம் பிள்ளைகள் தவறும் போது பின்பற்றப் படவேண்டிய ஓர் அணுகுமறையாகும்.

***4) நாம் பேசும் "உண்மை" ஏன் மற்றவரைக் காயப்படுத்துகிறது?***

யேசு சமாரியப் பெண்ணிடம் உண்மையைத் தான் பேசினார். ஆனால் அவர் பேசிய உண்மை அவளைக் காயப்படுத்தவில்லை ஆனால் அது அவளுக்கு மீட்பளித்தது. நாம் பல நேரம் "நான் உண்மையத்தான் பேசினேன்" என்று சொல்வோம். ஆனால் உண்மையின் பெயரில் சில நேரம் நடப்பது என்ன? மற்றவர் தாழ்ந்து போகிறார். அவருக்கு வெட்கம், கோபம், விரக்தி வருகிறது. உறவு உடைகிறது. மனம் மூடிக்கொள்கிறது. அப்போதும் நாம் சொல்வோம்: "சரியானதைத் தானே சொன்னேன்."

ஆனால் இயேசு உண்மையைச் சொல்வதில் இன்னொரு நோக்கம் வைத்திருக்கிறார்: உண்மை மனிதனை உயர்த்த வேண்டும். உண்மை மாற்றத்தை உண்டாக்க வேண்டும். உண்மை மனிதனை கடவுளிடம் மீண்டும் கொண்டு வர வேண்டும். அதனால் தான் இயேசுவின் உண்மை "கல்" போல இல்லை. அது "ஒளி" போல. வெளிப்படுத்துகிறது, வெடிக்கச் செய்வதில்லை. நாம் கேட்க வேண்டிய கேள்வி: "நான் திருத்தும்போது, அந்த மனிதன் உள்ளுக்குள் சிதறுகிறானா, அல்லது திரும்பி வர தொடங்குகிறானா?" என் வார்த் தைகள் அவரை மனிதராக உணர வைத்ததா? அல்லது அவமானப்படுத்தி மௌனப்படுத்தினதா? இயேசு காட்டும் பாதை தெளிவு: உண்மை இருக்க வேண்டும். ஆனால் அது இரக்கத்தின் கையில் இருக்க வேண்டும்.

**4] இயேசு கேள்வி கேட்டுக் குணப்படுத்தும் சிறந்த ஆசான்**

நாம் ஒருவரைப் பார்த்தவுடன், அவர் பேசும் ஒரு வரியை கேட்டவுடன், அல்லது ஒரு செயலை கண்டவுடன் உடனே முடிவுக்கு வந்துவிடுகிறோம். "அவர் இப்படிப் பட்டவர்", "இவர் இதுதான் நினைக்கிறார்", "இதுக்குப் பின்னால் இதுதான் காரணம்" என்று தீர்ப்பளிப்பது எளிது. ஆனால் இயேசு இப்படியான ஓர் எளிய பாதையைத் தேர்வு செய்யவில்லை. அவர் பல தடவைகள் தீர்ப்பு சொல்வதற்குப் பதில், கேள்வி கேட்டு மனிதர்களின் உள்ளத்தைத் திறக்கிறார். ஏன் கேள்வி கேட்கிறார்? ஏனெனில் கேள்வி என்பது ஒரு மனிதனுக்குச் சொல்லும் செய்தி: "நீ முக்கியமானவன். உன் கதை கேட்கப்பட வேண்டியது." இயேசு கேள்வி கேட்பது "தகவலுக்" காக அல்ல, மனிதனின் சுபீட்சமான வாழ்வுக்காக. இயேசு அனைத்தையும் அறிந்தவர். அவருக்குத் தகவல் தேவைப்படவில்லை. அவர் கேள்வி கேட்பது: மனத்தில் மூடிய கதவுகளைத் திறக்க, காயத்திற்குள் மறைந்த உண்மை வெளியே வர வைக்க, மனிதனை மீண்டும் தனது உள்ளத்துடன் நேருக்கு நேர் நிறுத்த. நாம் பல நேரம் கேள்வி கேட்பதில்லை. "எனக்குத் தெரியும்" என்று நினைத்து, பேசிக் கொண்டே போய்விடுகிறோம். நாம் உறவுகளைச் சிதைக்கின்றோம். பெற்றோர்களும் தம் வாழ்வல் பிள்ளைகளைப்பற்றித் தீர்ப்பிடாமல் அவர்களைக் குணப்படுத்த இயேசுவைப் போல கேள்வி கேட்கப் பழகவேண்டும். *(தொடரும்...)*

# இறைவனின் பெண்ணிய முகம்

அருட்பணி. அமிர்த யெயசேகரம்

இறைவன் ஆவியானவர். பால்நிலை வேறுபாடுகளைக் கடந்தவர். ஆனால் எக்காலத்திலும், பல்லினப் பண்பாடுகளிலும் இறைவன் ஆணாக வர்ணிக்கப்பட்டு உள்ளது. இறைவன் ஆவியாருக்கு பெயரும் முகமும் கொடுத்து வந்துள்ளனர். இது அனைவராலும் மௌனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது உண்மையா? இதை எதிர்ப்புகள் இன்றி ஏற்றுக் கொள்ள முடியுமா? வேதாகமம் முதல் (பழைய) ஏற்பாட்டில் இறைவன் பெண்ணிய இயல்புகள் கொண்டவராக வர்ணிக்கப்பட்டுள்ளது. தொடக்க நூலில் (1:26) அப்பொழுது கடவுள் மானிடரை நம் உருவிலும், தம் சாயலிலும் உண்டாக்குவோம்" தொடர்ந்து 1:27 இல் "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணும் ஆகப் படைத்தார்". இது இரு பாலினத்திலும் பொதிந்துள்ள உறவு நிலையை ஒன்றை ஒன்று நிறை வாக்குவதும், சமத்துவத்தையும் எண்பிக்கிறது. தொடக்க நூலின் இரு அத்தியாயங்களில் படைப்புப் பற்றிய இரு ஆசிரியர் களுடைய கருத்தாக்கம். இருபாலாருடைய ஒத்துழைப்பும், நிறைவு குறைவுகளை சமன்படுத்துவதாகவும் மட்டுமல்ல, இருவரும் உடலோடு, உள்ளதோடு இணைந்த கூட்டாளிகளாகவும், அனைத்திலும் பங்காளிகளாகவும் அமைகிறது.

தொடக்க நூல் 2:23 படைப்பின் பாடப் பட்ட முதல் காதல் பாடல், காதல் ஓவியம் "இதோ இவளே என் எலும்பின் எலும்பும் சதையுமாய் இருக்கிறாள்." ஆணோ, பெண்ணோ, ஒருத்தர் ஒருத்தருக்குத் தாழ்ந்தவர் அல்ல என்பது வேதாகமப் பின்புலத்தில் தெளிவாகிறது.

தந்தைவழி (Patriarchal)
தாய்வழி (Matriarchal)

காலம் காலமாக இருப்புக் கொண்டிருந்த தந்தைவழி தாய்வழி மரபுகள் ஒன்றையொன்று ஆட்சிசெலுத்தியதும் அதிகாரம் செலுத்தியதும் வரலாற்று உண்மை. சுற்றுச்சூழல் வசதிகள், பொருளாதாரம், பிள்ளை வளர்ப்புப் போன்ற பலகாரணிகள் ஆட்சிமாற்றத்திற்கு உந்தல் கொடுத்திருக்கிறது. சமத்துவ நிலை நீடிக்கவில்லை. சமகாலத்தில் ஆணின் மேலாண்மை வெளிப்படுத்தப்பட்டாலும் படிப்படியாகக் குறையுற்று வருகிறது. பெண்ணியத்தின் விடுதலை வேட்கையும். பெண்களின் உயர்கல்வி வாய்ப்புகள், நிறுவகங்களில் தலைமைப் பொறுப்புகளை ஆற்றுதல் ஐ. நாவின் அறநெறிச் திட்டங்களும் இம்மாற்றத்திற்கு ஓர் சில காரணிகளாக அமைகிறது.

ஒரே கடவுள் கொள்கை தழுவிய இஸ்ரயேலர் இறைவனை, பெண்ணியப் பார்வையுடனும் அழைத்தார்கள். தொடக்க நூல் 19:11 இல் எல்லாம் வல்ல தந்தை என்ற பதம், இறைவன் மார்பகம் கொண்டவர் என்றும், மலைகளின் இறைவன் எல்லாம் வல்ல இறைவன் என்றும், அழைக்கப்படுகிறது. எனவே இறைவனின் ஆண் பெண் பாச இயல்புகள் பின்னிப்பிணைந்துள்ளது. - தமிழில் அம்மை அப்பன் என்ற பாசத்துடன் அழைக்கப்படும் பதங்கள் பாவிக்கப்படுகிறது. படிப்படியாகத் தந்தை வழிமரபுக் கடவுள் இயல்புகள், தாய் வழிமரபுக் கடவுளின் இயல்புகள் சமன்படுத்தப்பட்டதையும், விடுதலைப் பயணம் (34:6-7) தந்தை வழிமரபுக் கடவுள் இயல்புகள் மிருதுவாக் கப்பட்டதையும், தாய் வழிமரபுக் கடவுள் இயல்புகள் ஒத்ததாக்கப்பட்டதையும் அவதானிக்க முடிகிறது.

விடுதலைப் பயண நூல்(36:6-7) பாலை வனத்தில் இஸ்ரயேல் மக்கள் தமது எகிப்தில் வாழ்ந்த வாழ்வை - தாம் உண்ட இறைச்சியை எண்ணி மோயீசனிடம் புலம்புகிறார்கள். அவ்வேளை மோயீசன் "நான் அனைத்து மக்களையும் பெற்றெடுக்கவில்லையா? நான் உனது வயிற்றில் இம்மக்களைக் கருவில் உருவாக்கி தாங்க வில்லையா? ஒரு தாதி பால் குடிக்கும் குழந்தையை பராமரிப்பது போல் செய்ய வில்லையா? (எண்:11-12)

மேலும் ஒசேயா(11:1) இஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன் மேல் அன்பு கூர்ந்தேன். எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன். இக்கருத் துக்கள் ஜெரமியாவிலும் தொடர்கிறது.(31:22) ஞான நூல்க ளிலும் இக்கருத்து எதிரொலிக்கிறது. இப்பாடலில் (22:9-10) "என்னை கருப்பையில் இருந்து கொணர்ந்தவர் நீரே, என் தாயிடம் பால் குடிக்கையிலே என்னைப் பாதுகாத் தவர் நீரே. கருப்பையில் இருந்தே உம்மை சார்ந்து இருந்தேன் நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என் இறைவன் நீரே" திருப்பாடலில் (131:2) என் நெஞ்சம் நிறைவும், அமைதியும் கொண்டுள்ளது. தாய்மடி தவழும் குழந்தை என என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது.

உன்னத சங்கீதத்தில் (1:13,14,16) "என் காதலர் வெள்ளைப் போள முடிப் பெண் என் மார்பகத்தில் தங்கிடுவார். என் காதலர் எனக்கு மருதோன்றி மலர் கொத்து எங்கேதித் தோட்டங்களில் உள்ள மருதோன்றி... " என்னே உன் அழகு? என் காதலரே! எத்துணை கவர்ச்சி! ஆம். நமக்குப் படுக்கை பைந்தளிர்." இப்பாடல் வரிகளில் ஆணின் மேலாண்மையும், பெண்ணின் தாழ்மைப்படுத்தலும் அடங்கவில்லை. இரு பாலினங்களுக்கு இடையில் ஆரோக்கியமான இசைவாக்கம் நிலைத்திருந்தது. ஞானம் இறைவனின் மகள் என்று அழைக்கப்படுகிறது. "ஞானத்தின் மேல் அன்பு கூர்ந்தேன். என் இளமை முதல் அதைத் தேடினேன்.

*(தொடர்ச்சி 7ம் பக்.)*




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(கஜன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: தையிட்டி விகாரையை அகற்றக்கோரி இலண்டனில் பிரதமரின் அலுவலகத்திற்கு முன்பாக நூற்றுக் கணக்கான நமது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அவர் என்ன செய்வார் என்று இவர்கள் ஆர்ப்பாட்டம் வைக்கிறார்கள்?**

**பதில்:** கஜன், உங்களை மாதிரி எனக்கும் அவ்வளவு அரசியல் ஓடாது! தையிட்டியில் தனியார் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக்கோரி தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறுவது சரி. அதனை வேண்டுமானால் இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் முன்பாகச் செய்யலாம். ஆனால், இலண்டன் பிரதமரின் அலுவலகம் முன்பாகச் செய்வதுதான் எனக்கும் புரியவில்லை! இச் செய்தியைப் பார்த்துவிட்டு ஒரு பெரியவர் கூறிய வார்த்தைகள்தான் எனக்கு உங்கள் கேள்விக்கான விடையாக வருகிறது: "பாவம் அந்த மனிசன்! துலைவான்கள், தாதுகோபுரத்தை இலண்டனில் கட்டியிருந்தா அவர் உடைச்சிருப்பார்! தையிட்டியில கட்டுறதுக்கு, இலண்டன்ல இருக்கிற அந்த மனிசனால என்னசெய்ய முடியும்!?

*(நிலா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: கோயில் குளம் போவதைச் சிலர் குறைத்துக் கொள்கின்றார்களே ஏன்?**

**பதில்:** ஒருவன் பின்வருமாறு எழுதியிருந்தான்: 'மனைவியே சாமியாகக் கிடைத்ததனால் நான் பல வருடமாகக் கோவிலுக்குச் செல்வதில்லை! என் மனைவி என் கடவுள்!' எனக் குறிப்பிட்டிருந்தான். தெய்வமே வீட்டில் இருப்பதால் கோவிலுக்குப் போவதைக் குறைத்துக் கொண்டார்கள் போலும், நிலா! இப்படி இருக்குமா? குளத்திற்குப் போகாத

தற்குக் காரணம், குளங்களை மூடுகிறார்கள், குளங்களில் குளிப்பதில்லை! அதனால் குளத்திற்குப் போவதையும் குறைத்துக் கொள்கிறார்கள். சரிதானே நிலா!

*(போல், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: பிள்ளைகள் தம் பெற்றோரைக் கவனித்துக்கொள்ளவது பராமரிப்பது மிகவும் தாழ்ந்திருக்கிறதே! ஏன்?**

**பதில்:** ஒருவர் பின்வருமாறு எழுதியிருந்தார்: '25 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய நாய் வீட்டிலும், 25 வருடம் வளர்த்த தாய்/தந்தை முதியோர் இல்லத்திலும்' என்று! பொருட்களைப் பாவித்து மனிதர்களை அன்புசெய்வதற்குப் பதிலாக, மனிதர்களைப் பாவித்துப் பொருட்களை அன்புசெய்ய ஆரம்பித்திருக்கிறோம்! அதனால் வந்த வினைதான் பெற்றோரை ஆதரிக்காமல் போவதற்குக் காரணம்! நம் சூழலில் இன்று இது மிகமிகக் கசப்பான உண்மையாகி வருகிறது!

## இறைவனின் பெண்ணிய....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள விரும்பினேன்" சாலமோன் ஞானம் (8:2).

**திரு அவையில் ஆண்களின் மேலாண்மை,**

திரு அவையிலும் ஆண்களின் மேலாண்மை, வத்திக்கான் இரண்டாம் சங்கம் ஈறாகத் தக்க வைக்கப்பட்டுள்ளது. இன்று சில மாற்றங்கள் இருந்தாலும் இன்னும் சமத்துவ நிலை உருவாகத் திருஅவை நெடிய பயணம் செய்யவேண்டும். இதுபற்றித் திருத்தந்தையர்கள் பிரான்சிஸ், லியோ இருவரும் வலுவான அறிக்கைகள் கொடுத்துள்ளார்கள். பெண்களின் இயல்பான கருணை, வலிமை, அரவணைப்பு, சக்தி, பலமும் பொருந்தியது. அடுத்தவர் வாழ்வை, துயரை அன்பினால் மாற்றக்கூடியது. அவர்களின் வலிமை, அடுத்தவர்மேல் அக்கறை, அனைத்து உறவுகளிலும், குடும்பத்திலும், சமூகத்திலும், திரு அவையிலும் ஊடறுத்து நிற்கிறது. அவர்கள் தியாகத்தை மகப்பேற்றில், வளர்ப்பில் பெற்ற அனுபவம், தொடர்ந்து வாழ்வில் நீடிக்கிறது. பலமுள்ள, சக்திவாய்ந்த அதிகாரம் கொண்ட, பெண்ணியம் மானுடத்திற்குத் தேவையானது. அனைத்து உயிர்களுக்கும் தேவையானது!

**பெண்ணியம் மகப்பேற்றில், வளர்ப்பில் பெற்ற அனுபவம், இயல்பான அன்புசார் கருணை, வலிமை தியாகமாக உருப்பெற்றுத் தொடர்ந்து வாழ்வில் நீடிக்கிறது. பலமுள்ள, சக்திவாய்ந்த அதிகாரம் கொண்ட பெண்ணியம் மானுடத்திற்குத் தேவையானது.**

---

### விண்ணக வாழ்வின் 7ம் ஆண்டு நினைவு

பிறப்பு 24 . 10 . 1966



இறப்பு 09 . 03 . 2019

அமரர்

**யோசவ் அன்ரன் லியோ அன்ரசன்**

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
புனித அந்தோனியாரின் தீவிர பக்தனாய்
வேறுபாடு பாராது அனைவரையும் அரவணைக்கும்
எம் அப்பா!
இறைவனிடம் நித்தம் எமக்காக நீங்கள் வேண்டுவதால் நாம் நன்நெறியில் சிறந்து, இறைவிசுவாசத்தில் நிலைத்தும் வாழ்கின்றோம், நன்றியோடு நினைக்கின்றோம். உங்கள் நிலைவாழ்வுக்காக இறைவனிடம் வேண்டுகின்றோம்.

நல்லாயன் வீதி, சில்லாலை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர், உறவினர்கள்

AD-128

---

விண்ணக வாழ்வில் நான்காண்டு நினைவு

பிறப்பு 07 . 11 . 1936



இறப்பு 16 . 08 . 2022

அமரர்

**பிலிப் அருளானந்தம்**

விண்ணக வாழ்வில் பன்னிரெண்டாண்டு நினைவு

பிறப்பு 23 . 11 . 1935



இறப்பு 15 . 03 . 2014

அமரர்

**அருளானந்தம் திரேசம்மா**

மண்ணக வாழ்வில் ஈருடல் ஓருயிராய் இணைந்து வாழ்ந்தீர்கள்.
விண்ணிலும் அவ்வாறே இணைந்திருக்க இறைவனின் ஆசியை வேண்டுகின்றோம்,
நீங்கள் இருவரும் ஊர் போற்ற உவப்புடன் வாழ்ந்தீர்கள்,
பணிவோடு பண்பையும், அன்பையும் ஊட்டி எம்மை ஒற்றுமையுடன் இனிதே வாழ
ஓயாது உழைத்தீர்கள். உங்கள் உழைப்பு என்றும் நிலைத்திருக்கும்
எம்மைப் பெற்ற அன்பு நெஞ்சங்களே நீங்கள் காட்டிய வழியில் என்றும் வாழ்வோம்.
இறைவனிடம் எமக்காக மன்றாடுங்கள் நாமும் உங்களிற்காய் தினமும் வேண்டுகின்றோம்.

**இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் 16.03.2026 (திங்கட்கிழமை) காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.**

36/2, கோவில் வீதி
யாழ்ப்பாணம்

அன்பு நினைவுகளுடன் சகோதரி,
பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD-130

---

### இறந்த 6ம் மாத நினைவஞ்சலியும் 74ம் பிறந்த தின நினைவும்

பிறப்பு 27 . 03 . 1952



இறப்பு 15 . 09 . 2025

அமரர்

**மேரி ஜெயராணி ஞானப்பிரகாசம்**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான இரங்கல் திருப்பலி
14.03.2026 (சனிக்கிழமை) 27.03.2026 (வெள்ளிக்கிழமை)
காலை 5.45 மணிக்கு யாழ். புனித மரியன்னை
பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்

நீங்கா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்.

AD-125

---

### விண்ணக வாழ்வின் 5ம் வருட நினைவு

பிறப்பு 23 . 10 . 1942



இறப்பு 26 . 09 . 2021

அமரர்

**அப்புக்குட்டி சுப்பிரமணியம்**

### விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவு

பிறப்பு 23 . 04 . 1952



இறப்பு 22 . 03 . 2025

அமரர்

**சுப்பிரமணியம் அற்புதமலர்**

'ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்'

173/1, கட்டைக்காடு வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

AD-126

## யாழ். மறைக்கோட்ட இளையோருக்கான தவக்காலத் தியானம்



யாழ். மறைக்கோட்ட இளையோருக்கான தவக்காலத் தியானம் கடந்த 01ஆம் திகதி தீவகம் சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளர் அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இத்தியானத்தில் சிலுவைப்பாதை, நற்கருணை வழிபாடு, தலைமைத்துவப் பயிற்சி, சமூகத் தொடர்பாடல் விழிப்புணர்வுக் கருத்தமர்வு என்பன நடைபெற்றன. நற்கருணை ஆராதனையைச் செபமாலைதாசர் சபை அருட்தந்தை ராஜசேகர் அவர்களும், தலைமைத்துவப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக் கருத்தமர்வை இளையோர் ஆணைக் குழு வளவாளர்களும் நெறிப்படுத்தினர். இத்தியானத்தில் யாழ். மறைக்கோட்டப் பங்குகளைச் சேர்ந்த 80 வரையான இளையோர் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## நீதி சமாதான ஆணைக்குழுவின் இயக்குநராக அருட்பணி அ.அகஸ்ரின் நியமனம்



யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் இயக்குநராக உரும்பிராய் பங்குத்தந்தை அருட்பணி அ.அகஸ்ரின் அடிகளாரை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இவ்வாரத்தில் நியமித்துள்ளார். வடகிழக்கு மக்களின் உரிமைக் குரலாக இருக்கும் யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவானது கடந்த யுத்த காலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலத்திலும் நீதியின் குரலாக இருந்து நாட்டின் சமாதானத்திற்காக பல்வேறு நிலைகளின் குரல்கொடுத்து வந்துள்ளது. கடந்த காலங்களில் இவ்வாணைக் குழுவின் இயக்குநராகச் சிறப்பாகப் பணியாற்றிய அருட்பணி எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளாருக்கு எம் நெஞ்சார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தேசிய அன்பிய ஆணைக்குழுக் கூட்டம்



தேசிய அன்பிய ஆணைக் குழுக் கூட்டம் கடந்த 3ஆம், 4ஆம் திகதிகளில் இரத்தினபுரி மறைமாவட்டம் குடாகம லூர்து அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது.

தேசிய இயக்குநர் அருட்தந்தை பிரிய ஜெயமான்ன அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கலைநிகழ்வுகள், அன்பியத் தரிசிப்பு, அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சி, அறிக்கை சமர்ப்பிப்பு என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் மறைமாவட்ட அன்பிய இயக்குநர்கள் மற்றும் பிரதிநிகள் கலந்து கொண்டதுடன் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் வைமன் குரூஸ் அவர்கள் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தார். யாழ். மறைமாவட்டதிலிருந்து மறைமாவட்ட அன்பிய இயக்குநர் கிளரேசியன் சபை அருட்தந்தை றொனால்ட் சுஜீவன், அருட்தந்தை லியான்ஸ் திருமதி. அன்ரனி றொபேட் லெசியா மற்றும் திருமதி. யுஸ்லின் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

## "உதிரம் சுமந்த சிலுவை" திருப்பாடுகளின் தியான ஆற்றுகை



குருநகர் புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தினரால் முன்னெடுக்கப்பட்ட **"உதிரம் சுமந்த சிலுவை"** திருப்பாடுகளின் தியான ஆற்றுகை கடந்த 01ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மன்ற தலைவர் செல்வன் கிறகோரி ஜெயராஜ் அவர்களின் தலைமையில் 60ற்கும் அதிகமான கலைஞர்களின் பங்குபற்றுதலோடு இவ்வாற்றுயை அரியநாயகம் அன்று யூலியஸ் அவர்கள் நெறியாள்கை செய்தார். இந்நிகழ்வின் ஆரம்பத்தில் குருநகர் பங்கிலிருந்து தேசிய கூடைப் பந்தாட்ட அணிக்குத்தெரிவுசெய்யப்பட்ட வீரர்கள், தேசிய ரீதியான சாதனை புரிந்த வீரர்கள், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

## புனித அந்தோனியாருக்கு யூனியன்குளத்தில் புதிய ஆலயம்





உருத்திரபுரம் பங்கின் யூனியன்குளம் புனித அந்தோனியார் ஆலயப் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்வாலயத் திறப்புவிழா கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜோண் கனீசியஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து ஆலயத்தை ஆசீர் வதித்துத் திறந்துவைத்துத் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், இறைமக்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யூதாததேயு ஆலய இளையோர் மன்றப் பொன்விழா நிகழ்வு



இளவாலை புனித யூதாததேயு ஆலய இளையோர் மன்றப் பொன்விழா சிறப்பு நிகழ்வு கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் தலைவர் செல்வன் அபிசேக் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள், முன்னாள் பங்குத் தந்தையர்கள் மற்றும் மன்றத் தலைவர்களுக்கான கௌரவிப்பு, "விழுது விடும் விருட்சம்" பொன்விழா மலர் வெளியீடு என்பன இடம் பெற்றன. கலைநிகழ்வுகளில் சிறப்பு நிகழ்வாக மன்ற முன்னாள் தலைவர் திரு. றொபின்சன் அவர்களின் நெறியாள்கையில் 60 கலைஞர்களின் பங்குபற்றுதலோடு வீரப்பெண் யூதித்தின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் "வீர மங்கை" வரலாற்று நாடகம் மேடையேற்றப்பட்டதுடன் நீண்ட காலமாக ஆலய செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும் இசையமைப்பாளர் திரு. யேசுதாஸ் அவர்களுக்கு " இளம் இசை வல்லோன்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக் குழு இயக்குநர் அருட்தந்தை ஜோண் குருஸ் அவர்கள் பிரதம விருந்தினராகவும், மானிப்பாய் சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளரும் மன்ற முன்னாள் தலைவருமான திரு. ஸ்ரீபன் நிக்ஸன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி ஆசிரியர் திரு. பேனாட் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

## சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தல சுற்றுமதில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு





சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தல சுற்றுமதில் கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது. திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து மதிலுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தின் முதன்மையானதும் 486 ஆண்டுகள் பழமை வாய்ந்ததுமான சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தல மதில் கட்டுமானப்பணிக்கு மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிலிருந்தும் அன்பளிப்பை பெறும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பேனாட் றெக்ணோஅவர்களும் அருட்தந் தையர்கள், இறைமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கட்டைக்காடுப் பங்கில் இலவச மருத்துவ முகாம்




கட்டைக்காடுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் இலவச மருத்துவ முகாம் கடந்த 01ஆம் திகதி யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக வைத்தியர் அமைப்பின் ஏற்பாட்டில் கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலையில் நடைபெற்றது. மருத்துவ அமைப்பின் தலைவர் மருத்துவ கலாநிதி டினேஸ் கூஞ்ஞ அவர்களின் தலைமையில் கட்டைக்காடுப் பங்குத் தந்தை அருட்தந்தை விமல சேகரன் வசந்தன் அவர்களின் உதவியுடன் நடைபெற்ற இம்முகாமில் 15ற்கு மேற்பட்ட மருத்துவர்களுடன் தாதியர்கள் தாதிய மாணவர்களென 50 பேர் கலந்து குருதி அமுக்கப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற்சிகிச்சை, புற்றுநோய்ப் பரிசோதனை, பெண் உடலியல் தொடர்பான பரிசோதனைகள் மற்றும் பொது உடற் பரிசோதனைகளை மேற்கொண்டு, நோயாளர்களுக்கான இலவச மருந்துகளையும் வழங்கினர். இம்முகாமில் 450 வரையான நோயாளர்கள் கலந்து சிகிச்சை பெற்றனர்.

## புதுக்குடியிருப்புப் பங்கில் இறையழைத்தல் பாசறையும், தவக்காலத் தியானமும்

புதுக்குடியிருப்புப் பங்கு மறைக்கல்வி மாணவர்களுக்கான இறையழைத்தல் பாசறை கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கார்மேல் கன்னியர்சபை அருட்சகோதரிகள் கலந்து குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள், கருத்துரைகள், படக்காட்சி என்பவற்றின் ஊடாக மாணவர்களை நெறிப்படுத்தினர். இந்நிகழ்வில் 180 வரையான மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

அத்துடன் புதுக்குடியிருப்பு பங்கு மறைக்கல்வி மாணவர்களுக்கான தவக்காலத் தியானம் கடந்த 27ஆம் திகதி மந்துவில் திருமுக ஆண்டவர் ஆலயத்தில் நடைபெற்றது. தியான உரைகள், குழு விளையாட்டுக்கள், சிலுவைப்பாதைத் தியானம், பொம்மலாட்டம், நற்கருணை வழிபாடு என்பன இடம்பெற்றன இத்தியானத்தில் 120ற்கும் அதிகமான மறைக்கல்வி மாண வர்கள் பங்குபற்றியிருந்தனர்.



## யாழ்ப்பாண மறைக்கோட்ட மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்

யாழ்ப்பாண மறைக்கோட்ட மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம் கடந்த 02ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட மறையாசிரியர் இணைப்பாளர் அருட்தந்தை பொன்ராசா டினுசன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிலுவைப்பாதைத் தியானம், தவக்காலச் சிந்தனை, நற்கருணை வழிபாடு, ஒப்புரவு அருட்சாதனம் என்பன இடம்பெற்றன. சிலுவைப்பாதை தியானத்தை யாழ். புனித மரியன்னை பேராலய உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை கமல்ராஜ் அவர்களும், நந்கருணை வழிபாட்டை குருநகர் உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்ரி ஞானராஜ் றொகான் அவர்களும் நெறிப்படுத்தியதுடன் தவக்காலச் சிந்தனையை கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ரவிராஜ் அவர்களும் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் யாழ்ப்பாண மறைக்கோட்டப் பங்குகளைச் சேர்ந்த 140ற்கும் அதிகமான மறையாசிரியர்கள் பங்குபற்றினர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு பங்குனி மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.